# நாடி

Pulse of the Singapore Muslim Community

*நாடி 2 ஹிஜ்ரி 1427 ஷவ்வால் அக்டோபர் 2006*

இலவசம்



## ஈகைத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் இனிய நல் வாழ்த்துகள்

# நோன்புப் பெருநாள் ஒளியூட்டு விழா

ஒரு மாத ரமலான் நோன்பு மக்கள் உள்ளங்களில் ஒளியேற்றும் புனிதக் கடமை. அதற்கு நல்வரவு கூறும் வண்ணம் கண் கவரும் இனிய ஒளியூட்டு விழா இடம் பெற்றதை மறக்க முடியுமா?

தற்காப்பு அமைச்சர் தியோ ச்சீ ஹியன் 22.9.2006 வெள்ளிக் கிழமை அன்று இரவு எட்டரை மணிக்கு புனித நோன்பு மாத ஒளியூட்டு விழாவை அதிகாரபூர்வமாகத் தொடங்கி வைத்தார். பார்க்வியூ சதுக்கத்திற்குப் பின்புறத்திலுள்ள திறந்த வெளியில் விழா நடைபெற்றது.

நோன்புப் பெருநாள் சந்தையும் திறந்து வைக்கப்பட்டது. துணிக் கடைகள், உணவுக் கடைகள் உள்ளிட்ட 120 கடைகள் சந்தையை அலங்கரித்தன.

வழக்கமாக கேலாங் செராயில் நோன்புப் பெருநாள் ஒளி வண்ண அலங்காரம் உச்சமாக இருக்கும். அங்குள்ள சந்தை சீரமைக்கப்படுவதால் இம்முறை கம்போங் கிளாம் பகுதியில் ஒளியூட்டு விழா நடைபெற்றது.

ஒபிர் ரோடு, நார்த் பிரிட்ஜ் ரோடு, பீச் ரோடு, கண்டஹார் ஸ்ட்ரீட் ஆகிய சாலைகளிலும் நோன்பு மாத ஒளி வண்ணத்தைக் கண்டு மகிழ முடிந்தது.

ஒளியூட்டு விழாவில் ஒரு மணி நேர ஆடல், பாடல் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. தொலைக்காட்சியில் ஒளியூட்டு விழா நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

மஜ்லிஸ் புசாட் அமைப்பைச் சேர்ந்த மலாய் கலாசாரக் குழுக்கள், சிங்கப்பூர் பயணத் துறைக் கழகம், தொலைக் காட்சி ஒளிவழி ஆகியவை இணைந்து நோன்புப் பெருநாள் ஒளியூட்டு விழாவை நடத்தின.

# ரிஃபாயி தரீக்கா - சங்க மவ்லூது

ரிஃபாயி ஆண்டகை என்றும் ஆரிபு நாயகம் என்றும் போற்றப்படும் சுல்தானுல் ஆரிபீன் ஷேக் செய்யது அஹமது கபீர் (ரலி) அவர்களின் 849-ஆம் ஆண்டு விழாவை நினைவு கூரும் சிறப்பு நிகழ்ச்சியை ரிஃபாயி தரீக்கா சங்கம் நடத்தியது.

சிங்கப்பூரில் 41 ஆண்டுகளுக்கு முன் ரிஃபாயி தரீக்கா தொடங்கப்பட்டது. அன்று முதல் ஆண்டு தோறும் மவ்லூது நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

மஸ்ஜித் அப்துல் கபூர் வளாகத்தில் 20.8.2006 அன்று காலை மணி 10.30 முதல் பிற்பகல் 1.30 வரை மவ்லூதுடன் சொற்பொழிவுகள் இடம் பெற்றன.

சங்கத்தின் கலீஃபா ஹாஜி பி.எம். அப்துல் சலாம் அவர்களின் தொடக்க உரையைத் தொடர்ந்து, ஹாஜி ஏ.ஜி. முஹம்மது முஸ்தபா வரவேற்புரையாற்றினார். ரிஃபாயி தரீக்கா சங்கம் திக்ரு மஜ்லிஸ் நிகழ்ச்சியுடன் மார்க்க, சமூக நிகழ்ச்சிகளையும் அவ்வப்போது நடத்தி வருவதை அவர் குறிப்பிட்டார்.



# நாகூர் தர்கா மரபுடைமை வளாக நிதி திரட்டும் விருந்தில் கலந்து கொள்ள அழைப்பு



சிங்கப்பூரின் தேசிய நினைவுச் சின்னங்களில் ஒன்றான தெலுக் ஆயர் ஸ்ட்ரீட் நாகூர் தர்கா மரபுடைமை வளாகமாக மேம்படுத்தப்படுவதை அறிவோம். தர்காவை *1.8* மில்லியன் (*18* லட்சம்) வெள்ளி செலவில் மேம்படுத்தும் பணிக்கு நிதி திரட்டுவதற்காக ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் அவர்களின் தலைமையில் செயற்குழுவை முயிஸ் அமைத்துள்ளது.

நாகூர் தர்கா மரபுடைமை வளாகமாக மேம்பாட்டுப் பணிக்கு நிதி திரட்டும் விருந்து நிகழ்ச்சி வரும் டிசம்பர் *3* ஞாயிற்றுக்கிழமை இரவு *7* மணிக்கு சிங்கப்பூர் எக்ஸ்போ, அரங்கு *7*-ல் (சாங்கி) நடைபெறவிருக்கிறது. மாண்புமிகு அதிபர் எஸ்.ஆர். நாதன் அவர்கள் அந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அறநிதி விருந்துக்கு பத்து இருக்கைகளைக் கொண்ட ஒரு மேசைக்குக் குறைந்த பட்ச நன்கொடை *$1,000*. அவற்றுடன் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள், அமைப்புகளின் ஆதரவுக்கென குறிப்பிட்ட எண்ணிக்கையில் *$3,000*, *$5,000* மற்றும் *$10,000* நன்கொடை மேசைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*3,000* வெள்ளி மற்றும் அதற்கு மேற்பட்ட நன்கொடை மேசை ஆதரவாளர்களுக்கு சிறப்பு விருந்தினர் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிப்பார். விருந்தில் ஹலால் உணவும், சைவ காய்கறி உணவுகளும் பரிமாறப்படும்.

விருந்துக்கான காசோலைகளில் **NAGORE DARGAH HERITAGE CENTRE** என எழுத வேண்டும்.

விருந்தில் கலந்து கொள்பவர்கள் தங்கள் காசோலைகளை

**Nagore Dargah**
**Heritage Centre Fund Raising Dinner**
**c/o No.1 Sophia Road**
**#03-50 Peace Centre**
**Singapore 228149**

முகவரிக்கு அன்பு கூர்ந்து அனுப்பும்படி ஏற்பாட்டுக் குழு கேட்டுக்கொள்கிறது.

ஆதரவாளர்கள் தனிப்பட்ட முறையிலும், நாகூர் தர்கா பாதுகாப்பு நினைவு நிதிக்கு **"Preservation of Monuments Fund - Nagore Dargah"** எனக் குறிப்பிட்டு நன்கொடை வழங்கலாம் என்று செயற்குழு தெரிவித்துள்ளது. அதற்கு தேசிய நினைவுச் சின்னங்களுக்கான நன்கொடை வரிச்சலுகைத் திட்டத்தின் கீழ் இரட்டை வரிவிலக்கு கிடைக்கும் என்பதையும் அது குறிப்பிட்டுள்ளது.

மேலும் விவரங்கள் தேவைப்பட்டால் செயற்குழுவினருடன் தொடர்பு கொள்ளலாம்:-

நஸீர் கனி : *96524721*
மு.அ. மசூது : *97958142*
ராஜ் முகம்மது : *96987400*
ஷேக் அலாவுதீன் : *90600086*
இலியாஸ் : *91894649*

# மெண்டாக்கி கல்வி விருது பெற்ற சமுதாயக் கண்மணிகள்

சிங்கப்பூரின் கல்விக் களம் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. பன்னோக்குடைய கல்வித் துறை அதிவேகமாக முன்னேறிச் செல்வதால் நமது சமூகமும் அதற்கு ஈடுகொடுத்து முன்னேற வேண்டும். மெண்டாக்கி முனைப்பாக அதற்குப் பங்காற்றி வருகிறது. நம் மாணவர்கள் கல்வித் தேர்ச்சியின் மூலம் உலகச் சந்தை மற்றும் போட்டித் திறனுக்கு ஆயத்தமாக வேண்டும் - சுற்றுப்புற, நீர்வள அமைச்சரும், முஸ்லிம் விவகார அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் வழங்கிய செய்தி இது.

அனுகெரா மெண்டாக்கி மற்றும் கோ சோக் தோங் இளம் கல்வியாளர் விருது, உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சியின் போது ஆக்ககரமான ஆலோசனைகளை அமைச்சர் தெரிவித்தார்.

நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரி அரங்கில் *2.9.2006* அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் *262* மாணவர்கள் மெண்டாக்கி கல்வி உதவித் தொகையையும் விருதையும் பெற்றனர். நால்வர் கோ சோக் தோங் கல்வி விருதைப் பெற்றனர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட போக்குவரத்து அமைச்சரும் இரண்டாம் வெளியுறவு அமைச்சருமான திரு ரேமன்ட் லிம் அந்த விருதுகளை மாணவர்களுக்கு வழங்கினார்.

## பெருமிதம்

மெண்டாக்கி *1982*-ஆம் ஆண்டிலிருந்து கல்வித் திறன் மிக்க மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறது.

மூத்த அமைச்சர் கோ சோக் தோங் பெயரிலான முஸ்லிம் மாணவர்களுக்குரிய சிறப்புக் கல்வி விருது *2005* பிப்ரவரியில் தொடங்கப்பட்டது.

கல்வி உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருவது பெருமிதம் தருவதாக மெண்டாக்கி இயக்குநர்கள் கழகத் தலைவருமான அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மத்ரஸா ஜிசிஈ 'ஓ' கல்வி உதவித் தொகை *4* மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. இவ்வாண்டு *15* பேர் அந்த உதவித் தொகையைப் பெற்றனர். உதவித் தொகை பெற்ற பல துறைத் தொழிற் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை இருமடங்குக்கு மேல் உயர்ந்தது. கடந்த ஆண்டில் *35* மாணவர்களும் இவ்வாண்டில் *98* பேரும் உதவி பெற்றனர்.

## சிறப்பு விருது

இந்திய முஸ்லிம் மாணவி நயீமா பிந்தி முஹம்மது அமானுல்லா (வயது *15*) அனுகெரா மெண்டாக்கி சிறப்பு விருதைப் பெற்றார்.



கிரஸண்ட் பெண்கள் பள்ளியில் பயின்ற அவர் பொதுக்கல்விச் சான்றிதழ் சாதாரண நிலை (GCE 'O' Level) தேர்வில் கடந்த

ஆண்டு அதிக மதிப்பெண்களைப் பெற்றார். தேசிய அளவில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற 10 விழுக்காட்டு மாணவ, மாணவிகளில் நயீமாவும் ஒருவர். ஆங்கிலமொழி உள்ளிட்ட பாடங்களில் குறைந்தபட்சம் ஏழு மேல்நிலை மதிப் பெண்களைப் பெற்ற மலாய்முஸ்லிம் இளையருக்கு அனுகெரா மெண்டாக்கி கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அந்த விருதைப் பெறுவதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து கல்வித் தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியர்கள், பெற்றோர்கள் முதலான அனைவருக்கும் நாடி இதழின் மூலம் நன்றி பாராட்டுவதாகக் கூறினார் நயீமா பிந்தி முஹம்மது அமானுல்லா. அவர் தேசிய தொடக்கக் கல்லூரியில் உயர் கல்வி பயின்று வருகிறார்.

உள்ளூர் பல்கலைக் கழகக் கல்விக்குரிய உதவித் தொகையையும் விருதையும் முஹம்மது ஜலீசுதீன் ஜலால், முஹம்மது முஸ்தபா s/o குத்தூஸ் ஆகியோர் பெற்றனர்.



மெண்டாக்கி - Anugerah Cemerlang - விருதும் ஆயிரம் வெள்ளியும் பெற்ற முஹம்மது ஜலீசுதீன் ஜலால் பரிசுகளையும் பாராட்டுகளையும் குவித்தவர். வயது 25.

நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்பக் கல்விப் பிரிவில் தகவல் தொடர்பு ஆய்வை சிறப்புப் பாடமாகப் பயின்றார். கடந்த ஜுன் மாதம் முதல் வகுப்பு ஆனர்ஸ் பட்டம் பெற்றார். தலைசிறந்த மாணவர் பட்டியலில் முக்கிய இடத்தைப் பெற்றவர் ஜலீசுதீன்.

ஆகஸ்ட் மாதம் சிங்கப்பூர் இந்திய கல்வி அறக்கட்டளையின் $ 2000 விருது அவருக்குக் கிடைத்தது. சிறப்பு விருந்தினர் கல்வி அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் அதனை வழங்கினார்.

செப்டம்பர் மாதம் சிண்டாவின் கல்வி மேம்பாட்டு விருதை ஜலீசுதீன் பெற்றார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் இங் எங் ஹியான் அதனை அளித்தார்.

பெரித்தா ஹரியான் நாளிதழ் அவரைப் பற்றிய செய்தித் தொகுப்பை அண்மையில் வெளியிட்டுச் சிறப்பித்தது.

முஹம்மது ஜலீசுதீன் ஜலால் சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சில் தற்பொழுது பணியாற்றுகிறார்.

உஸ்தாத் அப்துல்லா முன்னின்று நடத்தும் மஸ்ஜித் அல் அமீன் இந்திய முஸ்லிம் மதரஸா பணியிலும் அவர் பங்காற்றி வருகிறார்.

கல்வி விருதுகளும் வெகுமதிகளும் கிடைப்பதற்கு நல்லருள் புரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் நன்றியும் என தமது உணர்வுகளை "நாடி"யுடன் பகிர்ந்து கொண்டார் ஜலீசுதீன்.

தனது வளர்ச்சிக்கு நல்லன்புடன் ஆதரவு வழங்கி நல்வழிகாட்டிய பெற்றோருக்கும் பேராசிரியர்களுக்கும் அவர் நன்றி பாராட்டினார். அன்னல் நபி பெருமானார் அவர்கள் மீதுள்ள தூய விசுவாசம் தன் முன்னேற்றத்துக்கு வழிகாட்டி வருவதால் அவர்களுக்கு என்றென்றும் நன்றி உரியது என்றும் "நாடி"யிடம் அவர் கூறினார்.

"எனக்குக் கிடைத்த வாய்ப்பும் அங்கீகாரமும் இந்திய முஸ்லிம் சமூக மாணவர்களில் பலருக்கும் கிடைக்க வேண்டும். கல்வித் துறையில் அவர்கள் உன்னத நிலையைப் பெறவேண்டும்" என்ற ஆவலையும் நல்லெண்ணத்தையும் தெரிவித்தார் ஜலீசுதீன்.

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்






MUIS President Challenge High Tea 2006 at Grand Hyatt Singapore on 9th Sept 06





Announcement of site for Sengkang Mosque on 12th Aug 06, first in phase 4 of MBF programme





Opening of new annex building at Al Mukminin mosque on 1st Sept 06






Last day at MUIS building and last Friday prayers at Muhajirin mosque - 8th Sept 06

# மஸ்ஜித் ஜாமிஆ (சூலியா) சமூக, கல்விப் பணிகள்

புனித ரமலான் மாதத்தில் பல சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ள சவுத் பிரிட்ஜ் ரோடு ஜாமிஆ சூலியா பள்ளிவாசல், சமுதாய நல்லிணக்கம், விழிப்புணர்வு மற்றும் கல்விப் பணிகளை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

திருக்குர்ஆன் விளக்கவுரை, தராவீஹ் தொழுகைக்குப் பின் பயான் - உரை, நோன்பு திறப்புக்கு முந்திய துஆ, இறுதி 10 நாட்களில் பள்ளிவாசலில் தங்கி நோன்பு நோற்க இஃதிஹாப் ஏற்பாடு, தஜ்வீது வகுப்பு, தஹஜ்ஜத் தொழுகை, ஸஹர் உணவு வசதி, ஆங்கில மொழி பயான் ஆகியவை ரமலான் மாதத்தில் இடம் பெற்றன.

## இஸ்லாமியக் கல்விப் பணி

திருக்குர்ஆனை சிறார்கள் முறையாக ஓதுவதற்கும், மனனம் செய்வதற்கும் ஒருமாத முன்னோட்ட வகுப்பு நடத்தப்பட்டது. அதில் பங்கேற்ற சிறார்கள் பயனடைந்ததைத் தொடர்ந்து, பள்ளி விடுமுறைக் காலத்தில் இடம் பெற்ற மனன வகுப்பில் பெரியவர்களும் கலந்து கொண்டதாக பள்ளிவாசல் நிர்வாகம் "நாடி" இதழிடம் தெரிவித்தது.

ரமலான் மாதத்திற்குப் பிறகு இஸ்லாமிய அழைப்பாளர் பயிற்சி வகுப்பை தொடங்கவும் சூலியா பள்ளிவாசல் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இஸ்லாம் மார்க்கத்தை இளையோரும் மூத்தோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு முகத்தம், பர்ளு. ஐன் வகுப்புகள் மற்றும் உர்து மொழி வகுப்புகளை நடத்தவும் திட்டம் உள்ளதாக அது தெரிவித்தது.

இந்த வகுப்புகளிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் சமுதாய மக்கள் பங்கேற்றுப் பயனடையுமாறு மஸ்ஜித் ஜாமியா - சூலியா - நிர்வாக மன்றம் கேட்டுக் கொள்கிறது.



## மற்ற நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் காலை மணி 10.30 முதல் லுஹர் தொழுகை வரை இஸ்லாமிய சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்படுகிறது. உரையைத் தொடர்ந்து கேள்வி - பதில் அங்கம் இடம் பெறுகிறது.

மாதத்தின் முதல் சனிக்கிழமைகளில் மட்டும் இஷா தொழுகைக்குப் பிறகு, இரவு பத்து மணி வரை உர்து சொற்பொழிவு நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சியிலும் கேள்வி-பதில் அங்கமும் உண்டு.

சனிக்கிழமைதோறும் திருக்குர்ஆன் விரிவுரை மஃக்ரிப் தொழுகைக்குப் பிறகு நடத்தப்படுகிறது

வியாழக்கிழமைகளில் மஃக்ரிப் தொழுகைக்குப் பிறகு திக்ரு மஜ்லிஸ் நடைபெறுகிறது. தினமும் பஜ்ர் தொழுகைப் பின்பும், லுஹர் தொழுகைக்குப் பிறகும் ஹதீஸ் விளக்கமும், திருக்குர்ஆனை பிழையின்றி ஓதும் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

சிங்கப்பூரின் மத்திய சுற்றுலா வட்டாரத்தில் அமைந்துள்ள சூலியா பள்ளிவாசலுக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் பள்ளிவாசல் நிர்வாக மன்றம் தெரிவித்தது.



# மஸ்ஜித் தாருஸ்ஸலாம் தமிழ் முஸ்லிம் மதரஸாவின் புதிய வகுப்புகள், செயல் திட்டங்கள்

சமூக, சன்மார்க்க சேவையில் முனைப்பாக ஈடுபட்டுள்ள மஸ்ஜித் தாருஸ்ஸலாம் தமிழ் முஸ்லிம் மதரஸா 14 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளது. பதினைந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள இம் மதரஸா தொடர்ந்து நற்பணியாற்ற பல செயல் திட்டங்களையும், இலக்குகளையும் நிர்ணயித்துள்ளது.

மஸ்ஜித் தாருஸ்ஸலாம் (Clementi) தமிழ் முஸ்லிம் மதரஸா ஞாயிறுதோறும் மார்க்கக் கல்வி வகுப்புகளை நடத்தி வருகிறது. பிற்பகல் 3மணி தொடங்கி மாலை 6 மணி வரை பாலர்கள் முதல் பெரியவர்கள் வரை, ஆண்கள் பெண்கள் உள்ளிட்ட அனைவருக்கும் குர்ஆன் ஓதுதல், மார்க்க சட்டங்கள் மற்றும் ஒழுக்க நெறிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. சுமார் 250 பேர் இந்த வகுப்புகளில் பயின்று வருகின்றனர்.

இதையடுத்து மாலை 6 மணி முதல் 7 மணி வரை பெரியவர்களுக்கு சன்மார்க்க போதனை தமிழில் நடைபெறும் என்று மதரஸாவின் தலைமை ஆசிரியர் அஹமட் ஷா தெரிவித்தார்.

## பொது நிகழ்ச்சிகள், புதிய வகுப்புகள்

மஸ்ஜித் தாருஸ்ஸலாம் தமிழ் முஸ்லிம் மதரஸா பல பொது நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது.

ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமைகளில் இஷா தொழுகைக்குப் பிறகு சிறந்த மார்க்க அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது. அதைத் தொடர்ந்து தஸ்பீஹ் தொழுகையும் நடத்தப்படுகிறது.

மதரஸா அடுத்த ஆண்டு தொடங்கவிருக்கும் சேவைகள் குறித்த தகவல்களையும் அஹமட் ஷா அவர்கள் "நாடி" யுடன் பகிர்ந்து கொண்டார்.

"நமது முஸ்லிம் சமுதாயம் சன்மார்க்கக் கல்வியில் மேலும் முன்னேற வேண்டும். அதற்காகவே நம் சமூகத்தின் பேராதரவுடன் பிள்ளைகளின் மார்க்கக் கல்வி வளர்ச்சிக்காக வரும் 2007-ல் வார நாட்களில் பல வகுப்புகளைத் தொடங்க முற்பட்டுள்ளோம்.

"அதன்படி திங்கள் மற்றும் வியாழன் தினங்களில் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஓதும் வகுப்பு நடைபெறும். புதன்கிழமைகளில் பிக்ஹ் - மார்க்க சட்டங்கள் - வகுப்புகள் நடத்தப்படும். வெள்ளிக்கிழமை தோறும் குர்ஆனை மனனம் செய்யும் வகுப்புகள் இடம் பெறும்.

"இந்த வகுப்புகள் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு இரவு பத்து மணி வரை நடைபெறும்" என்று தலைமை ஆசிரியர் அஹமட் ஷா தெரிவித்தார். ஆர்வம் உள்ளோர் முன்பதிவு செய்து கொள்ளுமாறு மஸ்ஜித் தாருஸ்ஸலாம் தமிழ் முஸ்லிம் மதரஸா வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மேல் விவரங்கள் பெற தொடர்பு எண்: 93865671.



# குதூகலத்தின் எழுச்சி...குடும்ப தின மகிழ்ச்சி




கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது முதுமொழி. கணினி யுகத்தில், உலகமயப் புதுயுகத்தில் வாழ்ந்தாலும் அந்த முதுமொழியைப் புறக்கணிக்க முடியுமா?

பரபரப்பான வேலைச் சூழல்களும், கால வேகத்திற்கு ஈடு கொடுக்கும் கடமைளும் பொறுப்புகளும் இருந்தாலும் குடும்பங்கள், சுற்றம், சொந்த பந்த நட்பு வட்டங்கள் ஒன்று கூடி சந்தித்து உரையாடுவதில் குதூகலம் மிக அதிகம்.

அனைவரையும் ஒன்று திரட்டி, உரையாடி, உண்டு மகிழ்ந்து, நலம் விசாரித்து உற்சாகமான போட்டிகளை நடத்தி, நல்லுறவுகளை வலுப்படுத்திக் கொள்ள அரிய வழி குடும்ப தின விழா! சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் கடந்த 17.9.2006 ஞாயிறன்று ஈஸ்ட் கோஸ்ட் பார்க் கடற்கரையில் குடும்ப தின நிகழ்ச்சியை நடத்தியது.

நான்கு மாதம் திட்டமிட்டு ஏற்பாடு செய்த நிகழ்ச்சி காலை முதல் மாலை வரை கலகலப்புடன் அரங்கேறியது. சுமார் 600 பேர் குடும்பத்துடன் திரண்டனர்.

சிறப்புப் பேருந்துகளில் அணிஅணியாக குடும்ப உறுப்பினர்கள் கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

காலைத் தேனீர், சிற்றுண்டியுடன் நிகழ்ச்சி தொடங்கியது. மதிய உணவுடன் மனமகிழ் மன்றம், விளையாட்டு அரங்கம், இஸ்லாமிய அறிவுத்திறன் போட்டி, இளையர் காற்பந்தாட்டம், மூத்தோருக்கான விளையாட்டு முதலானவை அடுத்தடுத்து இடம் பெற்றன.

பரிசுகளுக்குப் பஞ்சமில்லை. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. நாள் முழுதும் அனைவருக்கும் உற்சாகம். கலகலப்பு. நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், மேயர் ஜெய்னுல் ஆபிதீன் ரஷீத் அவர்களின் வருகை நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக அமைந்தது. அவருடைய பங்களிப்பு அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

நிறைவு நிகழ்ச்சியாக சுமார் ஒருமணி நேரம் நடைபெற்ற அதிர்ஷ்டக் குலுக்கில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பரிசுகளைப் பெற்றனர். அவரவரும் ஆவலுடன் பரிசு கிட்டுமா என எதிர்பார்த்து உற்சாக ஆரவாரம் எழுப்பிய காட்சி கலகலப்பை ஏற்படுத்தியது.

குதூகலமான இத்தகைய குடும்ப தினக் கொண்டாட்டம் அடிக்கடி இடம் பெற வேண்டும் என்று பலரும் கூறினர். ஆண்டு தோறும் குடும்ப தின விழாவை சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் இறையருளால் மேலும் சிறப்பாக நடத்தும் என்று “நாடி” யிடம் தெரிவித்தார், சங்கச் செயலாளர் ஹாஜி கே.பி. முஹம்மது ஜாஃபர்.



### அல் ஹைர் இஸ்லாமியப் பிள்ளை வளர்ப்புப் பகுதி

# பயமா? பாசமா?

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள். இந்த நடுக்கம் அந்த பாம்பைப் பார்த்துக் கூட ஏற்படுவதில்லை; மாறாக அந்தப் பெயரைக் கேட்டாலே ஏற்படுகின்றது. காரணம், அதை சிறு வயதில் நமது பெற்றோரும், சுற்றத்தாரும் எப்படி அறிமுகப்படுத்தி இருக்கின்றார்களோ அப்படித்தான் அதன் தன்மைகளை நாம் விளங்கி உள்ளோம். பாம்பென்றால், அது கூரிய விஷப் பற்களால் கடித்து, அதிலிருந்து பாயும் விஷம் நம் உடலில் ஏறி மரணத்தை ஏற்படுத்தும் என்று நமக்கு அறிமுகப்படுத்தப் பட்டிருப்பதால் நாம் இப்படி பயப்படுகிறோம். அது மட்டுமல்ல, நாம் பயப்படும் ஒன்றின் மீது நமக்கு அன்போ பாசமோ ஏற்படுவதில்லை. மாறாக வெறுப்புதான் தோன்றுகிறது.

இதற்கு நேர் மாறான ஓர் உதாரணம் “கிறிஸ்துமஸ் தாத்தா” எனப்படும் கற்பனைப் பாத்திரமான “சான்டா கிலாஸ்”. டிசம்பர் மாதம் வந்தால் போதும் சிவப்பு உடை அணிந்து நீண்ட வெள்ளைத் தாடி பூண்ட மனிதர்கள், சிறு பிள்ளைகளைக் களிப்பில் ஆழ்த்த தெரு வீதிகள் முதல் கடைத்தொகுதிகள் வரை எல்லா இடங்களிலும் தோன்றுகிறார்கள். இவ்வேடத்தைப் போட்டிருப்பவர்களைக் கண்டாலே சிறுவர்களுக்குப் பெருத்த மகிழ்ச்சி. ஏன் என்றால், கிறிஸ்துமஸ் தாத்தா அன்பாளர், தங்களுக்குப் பிடித்த விளையாட்டுப் பொருட்களை பரிசுப் பொருட்களாகக் கொண்டு வரக்கூடியவர் என்றெல்லாம் பெற்றோரும், சுற்றத்தாரும், மீடியாவும் சேர்ந்து மார்க்கெட்டிங் செய்துள்ளதால் குழந்தைகளுக்கு இந்தப் மனப்போக்கு. இதில் விந்தை என்னவென்றால், பொதுவாக குழந்தைகளுக்குத் தாடி வைத்தவர்களைப் பார்த்தால் ஏற்படும் பீதி கூட இவரின் அன்புக் கோலத்தை அசைக்க முடியவில்லை!

இந்த விளக்கங்களுக்குப் பிறகு, அல்லாஹ்வை உங்கள் மழலைச் செல்வத்திற்கு எப்படி அறிமுகப் படுத்தப் போகிறீர்கள்?” அதைச் செய்யாதே அல்லாஹ் அடிப்பான், இதைச் செய்யாதே அல்லாஹ் நெருப்பில் போட்டு விடுவான்?.” என்றா? அல்லது “நம்ம அல்லாஹ் இருக்கிறானே அல்லாஹ்! அவன் ரொம்ப நல்லவம்மா! அவனுக்கு உன்னை ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அம்மா கூட உன்னை பிரிஞ்சு இருந்திடுவேன்.அல்லாஹ் உன்னை பிரிஞ்சு ஒரு நொடி கூட இருக்க மாட்டான். உனக்கு என்னென்ன தேவையோ அத்தனையும் அவன் உனக்கு உடனே செஞ்சுத் தருவான். அம்மாவையும் அத்தாவையும் உன்னை பத்திரமா பாத்துக்கத்தான் அனுப்பிச்சுருக்கான். அம்மா வேலையா இருக்கும்போது நீ எங்கிட்டே பேசினா கோச்சுக்குவேன். ஆனா, அல்லாஹ் நீ எப்ப பேசுனாலும் சந்தோசப்படுவான்.

உண்மையிலே! நீ அவன்கிட்டே பேசமாட்டியாண்டு உன் பேச்சை கேட்குறதுக்கு ஆசையோட ஏங்கிக்கிட்டிருக்கான்..” என்றா?

அல்லாஹ் என்பவன் கற்பனை அல்ல. அவன் நம் மீது கொண்டுள்ள கருணையின் ஆழம், நம் கற்பனைக்கு எட்டக் கூடியதும் அல்ல. உங்கள் குழந்தையிடம் அவனை அளவில்லாத அன்பாளன் என்று வெற்றிகரமாக ‘மார்க்கெட்டிங்’ செய்து, அந்த பிஞ்சு உள்ளத்தில் அவன் நேசத்தைப் விதைத்துப் படரச்செய்து விட்டீர்கள் என்றால், அந்த நற்செயலுக்காக அல்லாஹ் உங்கள் மீது கொள்ளக்கூடிய சந்தோஷத்தையும் உங்களால் கற்பனை செய்துப் பார்க்க முடியாது!

உங்கள் குழந்தை “அல்லாஹ்!” என்ற பெயரைக் கேட்டதும் வெறுப்பாலும், பயத்தாலும் அவனை விட்டு விலகி ஓடுகிறதா, அல்லது “அல்லாஹ்!” என்றதும் அவன் மீதுள்ள கடுமையான பாசத்தால் அவனை நோக்கி அன்புடனும், ஆசையுடனும் ஓடுகிறதா என்பது - உங்கள் கையில்.

அபூ உமர் காலித்
கல்வி குழு
அல் ஹைர் ஆங்கில மதரசா (EMAK)
மஸ்ஜிது அல் ஹைர்
emak@alkhair.mosque.org.sg

# கடையநல்லூர் முஸ்லிம் லீக் இணைந்து நடத்திய இனிய இஃப்தார் நிகழ்ச்சி



சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் முஜாஹிதீன் பள்ளிவாசல் நிர்வாகத்துடன் இணைந்து இஃப்தார் - நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை நடத்தியது.

7.10.2006 மாலை ஆறரை மணிக்கு மஸ்ஜித் முஜாஹிதீனில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சி சிங்கப்பூரின் சமய நல்லிணக்கத்திற்கும் ஐக்கியத்திற்கும் அரிய எடுத்துக்காட்டாக அமைந்தது.

நிகழ்ச்சியை வழிநடத்திய இஃப்தார் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும் சங்கத்தின் துணைத் தலைவருமான ஹாஜி அப்துல் மாலிக், நோன்புக் கடமையின் மாண்பை சுருக்கமாக எடுத்துரைத்தார்.

சங்கத் தலைவர் ஹாஜி நஸீர் கனி, அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி இஸ்லாம் மற்றும் நோன்பின் கோட்பாட்டை எடுத்துரைக்கும் அர்த்தமுள்ள,பயன்மிக்க நிகழ்ச்சி என்று அவர் குறிப்பிட்டார்.

குவின்ஸ்டவுன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பே யாம் கெங் (Baey Yam Keng) சிறப்பு வருகையாளராக நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். ஆண்டுதோறும் நடைபெறும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி, சிங்கப்பூரின் சமயப் புரிந்துணர்வுக்கும் நல்லிணக்கத்திற்கும் முக்கிய பங்காற்றி வருகிறது. சிங்கப்பூர் பள்ளிவாசல்கள் பலவற்றில் நடைபெறும் இஃப்தார் நிகழ்ச்சிக்கு முஸ்லிம் அல்லாதவர்களும் அழைக்கப்படுகின்றனர். இதன் மூலம் மற்ற சமய அன்பர்கள் பள்ளிவாசல்களைப் பார்வையிடவும், ரமலான் நோன்பு உள்ளிட்ட இஸ்லாமியக் கடமைகளை அறிந்து கொள்ளவும் முடிகிறது. பல சமய, சமூக ஒருங்கிணைப்புக்கு இது பாலமாகத் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்கும் முஜாஹிதீன் பள்ளிவாசலும் இணைந்து நடத்திவரும் சமூக நலத் திட்டங்கள் சிலவற்றையும் திரு. பே யாம் கெங் சுட்டிக்காட்டினார். திருமண வழிகாட்டி வகுப்புகள், இலவச சட்ட, மருத்துவ ஆலோசனை சேவைகள், கல்வி, விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவை அவற்றுள் அடங்கும்.

சமூக மன்றங்கள், அக்கம் பக்க அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து மேலும் பல நிகழ்ச்சிகளை நடத்தவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். குவின்ஸ்டவுன் சமூக மன்ற உறுப்பினர்கள், தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், தக்கலை முஸ்லிம் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.

இஃப்தார் நிகழ்ச்சியின் மற்றொரு அங்கமாக சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெற்றன. மஃக்ரிப் தொழுகைக்குப் பிறகு உஸ்தாத் முஹம்மது முஹைதீன் ஃபைசியும், தராவீஹ் தொழுகைக்குப் பிறகு உஸ்தாத் ஹாமீம் உத்மான் ஃபைசியும் உரையாற்றி இஃப்தார் நிகழ்ச்சியை நிறைவு செய்தனர்.



# சிங்கப்பூரில் கலைமாமணி இசைமுரசு நாகூர் இ.எம். ஹனிபா அவர்களுக்கு பாராட்டு விழா

இஸ்லாமியப் பாடல்கள் என்றால், உலகத் தமிழ் மக்களுக்கு உடனே நினைவிற்கு வருபவர் இசைமுரசு நாகூர் இ.எம். ஹனிபா அவர்கள். தமிழ் பேசும் மக்கள் நடமாடும் இடங்களிலெல்லாம் அவர் பாடல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

இசைமுரசு இ.எம். ஹனிபா அவர்கள், தாய்லாந்து தலைநகர் பேங்காக்கில் கடந்த ஆகஸ்ட் 25-ஆம் தேதி, தமிழ் முஸ்லிம்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பள்ளிவாசல் திறப்புவிழாவிலும், அவருடைய வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்டு விட்டு, மலேசிய நகரங்களில் நிகழ்ச்சிகளை நடத்திய பிறகு குடியரசுக்கு வந்தார்.

81-வயது நிரம்பிய இசைமுரசு அவர்கள் ஒரு பாடகர் மட்டுமல்ல, பொது வாழ்க்கையிலும் முத்திரை பதித்தவர். பெரியார், காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப், அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமது இன்னும் பல தலைவர்களுடன் நெருக்கமான நட்பு கொண்டவர்.

இவர் தமிழக மேல் சபை உறுப்பினராக (MLC) 1971-76 வரை பணியாற்றியிருக்கிறார். தமிழ் நாடு வக்ஃப்பு வாரிய தலைவராக பதவி வகித்திருக்கிறார். திமுக-வின் பொதுக்குழு உறுப்பினராக, தற்போது செயற்குழு உறுப்பினராக பணியாற்றுகிறார்.

ஹனிபா அவர்களுக்கு "இசை முரசு", "அருள் இசை அரசு", "இசைக் களஞ்சியம்" போன்ற விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழக அரசின் கலைமாமணி விருது, மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்ச் செம்மல்கள் பேரவையின் "தமிழ்ச் செம்மல்" பட்டம், முரசொலி அறக்கட்டளையின் "கலைஞர் விருது" பெற்றிருக்கிறார்.

கத்தார் நாட்டின் தமிழ்ச் சங்கம் "எழில் இசை வேந்தர்" பட்டத்தை வழங்கியிருக்கிறது.



2002-ஆம் ஆண்டு குடியரசிற்கு வருகை தந்திருந்தபோது தமிழவேள் நற்பணி மன்றம் இவருக்கு "இசை வாணர்" பட்டம் வழங்கி பெருமைப்படுத்தியது.

குடியரசிற்கு குறுகியக் கால வருகை மேற்கொண்ட இசை முரசு அவர்களை சிறப்பிக்கும் வகையில் பாராட்டு விழாவிற்கு சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம் நற்பணிக் குழு ஏற்பாடு செய்தது. 10-09-2006 ஞாயிற்றுக்கிழமை பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு அரங்கில் தொழிலதிபர் ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் PBM தலைமையில், தமிழர் பேரவை துணைத்தலைவர் மு.அ. மசூது முன்னிலையில் பாராட்டு விழா நடைபெற்றது. ஜாமியாவின் தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன் BBM சிறப்பு விருந்தினராக வருகை தந்து உரையாற்றினார். நற்பணிக் குழுவின் செயலாளர் எம்.இலியாஸ் வரவேற்புரை ஆற்றினார். பென்கூலன் பள்ளிவாசல் இமாம் மௌலவி எம்.எஸ். அப்துல் கையூம் பாகவி, வழக்குரைஞர் திரு ஆர். கலாமோகன், மீடியாகார்ப் தயாரிப்பாளர் ஸதக்கத்துல்லாஹ் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.

பாராட்டு விழாவைத் தொடர்ந்து இசைமுரசு அவர்கள் தம் குழுவினருடன் இன்னிசை விருந்து வழங்கினார். சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம் பெருமக்கள் சார்பில் "இஸ்லாமிய இன்னிசைச் செல்வம்" என்ற பட்டத்தை தமிழ் முஸ்லிம் நற்பணிக் குழுவின் தலைவர் ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் PBM வழங்கிச் சிறப்பித்தார்.